## 6.2 ஒவ்வொரு மாவட்டத்திலும் குறைந்தது 2 சமத்துவபுரங்கள் அமைக்க முன் மொழிவுகள் மற்றும் சமத்துவபுரத்தில் குடியிருப்போர் எடுத்துக் கொள்ள வேண்டிய உறுதிமொழி

சி.வி. சங்கர், இ.ஆ.ப.,
ஆணையர்
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை

நே.மு.க.எண். ஆ1/41732/97 நாள் : 7.11.1997

பொருள் : சமத்துவபுரம் மாவட்டங்களில் சமத்துவபுரம் குடியிருப்பு அமைத்தல் புதிய திட்டம் செயல்படுத்துதல் – சார்பாக

பார்வை : அரசாணை (நிலை) எண்.171 ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, நாள் 22.10.1997

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்துள்ளவாறு விடுதலைப் பொன்விழா ஆண்டையொட்டி தமிழகத்தில் 50 இடங்களில் அனைத்து சாராரும் ஒன்று சேர்ந்த குடியிருக்கும் வகையில் சமத்துவபுரங்கள் உருவாக்க பார்வையில் கண்டுள்ள அரசாணை வெளியிடப்பட்டது தாங்கள் அறிந்ததே.

2. அவ்வரசாணையின் அடிப்படையில் தங்களது மாவட்டத்தில் குறைந்த பட்சம் இரு இடங்களிலாவது சமத்துவபுரம் அமைப்பதற்கான நிதி ஒதுக்கீடு அரசிடமிருந்து (எதிர்பாராச் செலவு நிதியிலிருந்து முன்பணம் ) பெற தங்கள் மாவட்டத்திற்கு தேவைப்படும் தொகையை 15.11.97க்குள் முன்மொழிவு அனுப்பக் கேட்டுக் கொள்கிறேன்.

3. இம்முன்மொழிவில் அரசாணையில் தெரிவிக்கப்பட்டுள்ள அனைத்து வசதிகளும் சமத்துவபுரத்தில் அமைத்திட வசதிகளின் இனம் வாரியாகவும், நிலமெடுப்பிற்குத் தேவைப்படும் தொகைகளையும் தனித்தனியே மதிப்பீடு செய்து முழுமையாக முன்மொழிவினை அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்கிறேன். அடிப்படை வசதிகளைப் பொறுத்த வரையில் அரசாணை பத்தி 6ல் உள்ளவாறு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

4. இத்துடன் இணைக்கப்பட்டுள்ள பட்டியலில் கண்டவாறு பல்வேறு துறை அலுவலர்கள் அவரவரர் துறைக்கு ஒதுக்கப்பட்ட பணியினை செவ்வனே செய்தால்தான் சமத்துவபுரம் சிறப்பான முறையிலும் துரிதமாகவும் அமைக்க முடியும் என்பதை அத்துறை அலுவலர்களுக்கு சுட்டிக்காட்டி அதனை சிறப்பாக முடிக்க ஆவன செய்யுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

5. மேலும் அனைத்து சமுதாய மக்களும் ஒருங்கிணைந்து வாழ அரசு செய்தி மலர் இதழ் 29 (நாள் 29.10.97) –ல் சமத்துவபுரத்தில் குடியிருக்க வருவோர் எடுத்துக் கொள்ள வேண்டிய உறுதிமொழிகளையும் தங்களது மேல் நடவடிக்கைக்காக இணைத்துள்ளேன்.

**சி.வி. சங்கர்**
ஆணையர்

பெறுதல்

அனைத்து மாவட்ட ஆட்சியர்கள்

**6. SAMATHUVAPURAM**

## இணைப்பு –1

### சமத்துவபுரம் அமைக்க பலதுறை அலுவலர்களின் பணிகள் பற்றிய விபரங்கள்

1. திட்ட அலுவலர்/ ஊராட்சி ஒன்றிய ஆணையர்

அ. 30 அடி அகல தார்ச்சாலை வீதிகள், வடிகால் வசதிகளுடன் ஏற்படுத்துதல்.
ஆ. தெருமின்விளக்கு வசதிக்காக தொகை செலுத்துதல்.
இ. பூங்கா அமைத்தல்.
ஈ. சமுதாயக் கூடம் அமைத்தல்.
உ. தொலைக்காட்சி பெட்டி அறை அமைத்தல்.
ஊ. நூலகம் ஏற்படுத்துதல்.
எ. சத்துணவு கூடம் அமைத்தல்.

2. தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம்.

அ. மேல்நிலை குடிநீர் தொட்டி அமைத்தல்.
ஆ. குடிநீர் ஆழ்துளை குழாய் அமைத்தல் ( மின் வசதியுடன்)
இ. தெருக்குழாய்கள் அமைத்தல் / வீடுகளுக்கு இணைப்புகள் வழங்கல்

3. மாவட்ட தொடக்கக் கல்வி அலுவலர்.

தேவைக்கேற்ப துவக்கப்பள்ளி ஏற்படுத்துதல்.

4. மாவட்ட குடிமைப்பொருள் வழங்கல் அலுவலர்.

குடிமைப்பொருள் வழங்கு கடை அமைத்தல்.

5. மின்சார வாரியம்.

அ. தெருவிளக்கு அமைத்தல்.
ஆ. வீடுகளுக்கு மின்வசதி செய்து கொடுக்க தேவையான நடவடிக்கை மேற்கொள்ளுதல்.
இ. குடிநீர் ஆழ்துளை கிணறு / மேல்நிலைத் தொட்டிக்கு முன்னுரிமை வழங்கி மின்வசதி ஏற்படுத்துதல்.

6. கூட்டுறவுத் துறை துணை பதிவாளர் ( வீட்டு வசதி)

சமத்துவபுரத்தில் குடியேற இருப்பவர்களுக்கு வீட்டு கடன் வழங்க போதுமான நிதி வசதி பெற்று தயார் நிலையில் வைத்துக் கொள்ளுதல்.

**கீழ்கண்ட நிபந்தனைகளுக்கு உட்பட்டு உறுதிமொழி ஏற்கும் தகுதியுடைய நபர்கள் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.**

**உறுதிமொழி**

வட்டம் . . . . . . . . . . . . . . . கிராமத்தில் வசிக்கும் திருமதி / திரு . . . . . . . . . . . . . . . . . . . . அவர்கள் மாவட்ட ஆட்சித்தலைவர் முன்னால் ஏற்பு செய்த நிபந்தனைகள்.

1. சமத்துவபுரத்தில் புகுவோர் அனைவரும் சாதி, சமய பாகுபாடு இல்லாமல் அமைதியாக ஒற்றுமையாக வாழ்வோம்.

2. சமத்துவபுரத்தில் புகுவோர், அமைய உள்ள சமுதாயக் கூடத்தில் வழிபாடும், திருமணம் போன்ற சடங்குகளையும் செய்ய வேண்டும். தனித்தனியாக ஒவ்வொரு மதத்திற்கும் பொது இடத்தில் வழிபாட்டுத் தலங்கள் இல்லாமல் சமுதாயக் கூடத்தினை பயன்படுத்திக் கொள்ள வேண்டும். அவரவர்களுக்கு ஒதுக்கப்பட்ட மனைகளில் வழிபாட்டுத் தலங்களை அமைத்துக் கொள்வதில் ஆட்சேபனை இல்லை.

3. சமத்துவபுரத்தில் குடிபுகுவோர் அனைவரும் தங்கள் இல்லங்களில் இறப்பு நேரிட்டால் சடலங்களை புதைக்க விரும்பினால் சமத்துவபுரத்தில் அமைய உள்ள இடுகாட்டினையும், எரிக்க விரும்பினால் பொது சுடுகாட்டினையும் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். ஆகவே, ஒரு சுடுகாடு / ஒரு இடுகாடு என்ற வழிமுறை கடைப்பிடிக்கப்படும்.

4. எந்தவிதமான தலைவர் சிலையையும் சமத்துவபுரத்தில் வைக்க சம்மதிக்கவோ அல்லது அனுமதிக்கவோ மாட்டேன் என்று உறுதி கூறுகின்றேன்.

மேற்கண்ட நிபந்தனைகளை மீறுவதாக தெரிந்தால் விதிக்கும் தண்டனைக்கு சம்மதிப்பதோடு நஷ்டப்பட்ட ஈட்டுத் தொகையின்றி ஒப்படைத்த இடத்தையும், அரசு மானியத்தில் கட்டிய வீட்டையும் மீண்டும் அரசு எடுத்துக் கொள்ளலாம் என சம்மதிக்கிறேன்.

பயனாளியின் கையொப்பம்.